கோவை கராமனாதபுரம் மாவட்ட முதன்மை / அமர்வு நீதிபதி அவர்கள் முன்பாக

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364134

1. District : கராமனாதபுரம் PS: உழவர் சந்தை Year: 2026 FIR No.: 03/2026 Date: 21.05.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: உழவர் நலன் நிறுத்தம் சட்டம் 2018 Sections பிரிவுகள்: 7(a) of the Amendment Act 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 20.05.2026 Date to : மறுநாள் 03.30 மணி
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time : காலை 09.15 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.05.2026 நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் தொகுதி - II நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தோராயமாக 03 கிமீ தொலை

Beat Number : (b) Address : வெளிப்பட்டினம் சார்பதிவக அலுவலகம்
முறைக் காவல் எண் முகவரி கராமனாதபுரம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Dr. A. வரலிங் அலவுதீன் (b) Father's/ Husband's Name : அப்துல் ரகீம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 32/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : மருத்துவர் (g) Address : 12-H. பார்க் அபார்ட்மெண்ட், 200 அடி ரோடு, தோரம்போடை, சென்னை-6
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. கராமனாதன், சார்பதிவாளர், வெளிப்பட்டினம் சார்பதிவகம், கராமனாதபுரம்.
2. பத்திரம் எழுதும் அலுவலகம் நடத்தும் ஆயுள்காள், கராமனாதபுரம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் ஏதுமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : M.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 21.05.2026 ஆம் தேதி காலை 09.15 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி Dr.A.ஹாலிக் அலாவுதீன் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் திரு.இராமநாதன் மற்றும் அயூப்கான் ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.03/2026 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 21.05.2026 ஆம் தேதி காலை 09.45 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் Dr.A.ஹாலிக் அலாவுதீன், வயது 32/2026, த/பெ அஜ்மல்கான், 12-H, பார்க் அபாண்ட்மெண்ட், 200 அடி ரேடியல் ரோடு,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
21/05/2026

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
21.05.2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 09.50hrs.

Name: பெயர் ...M. குமரேசன்..
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்
ஊ.த.க. பிரிவு, இராமநாதபுரம்

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 03/2026 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி

குரோம்பேட்டை, சென்னை-600 044 பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். எனது பூர்வீகம் இராமநாதபுரம் மாவட்டம் ஆகும். நான் தற்போது சென்னை பெருங்குடி அப்பலோ புரோட்டான் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். எனது தந்தை கடந்த 05.12.2025 ஆம் தேதி குயவன்குடி கிராம சர்வே எண். 127/1ல் உள்ள 4 ஏக்கர் 77 செண்டில் 1 ஏக்கர் 98 செண்ட் இடத்தை வெளிப்பட்டிணம் சார்பதிவகத்தில் Adjudication செய்யப்பட்டு அதற்கு வரிசை எண். ADJ No.203/2025 பிரகாரம் ஜெனரல் பவர் பதிவு செய்த நிலையில் என் அம்மா தௌலத் நூரியா பெயரில் கிரைய ஆவணமாக பதிவு செய்ய கடந்த 07.05.2026ஆம் தேதி காலை 09.45 மணிக்கு இராமநாதபுரம் மாவட்ட வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் திரு.இராமநாதன் அவர்களை நேரில் சந்தித்து விபரம் கேட்டதற்கு, மேற்படி சொத்தை கிரைய ஆவணமாக பதிவு செய்ய ரூ.50 இலட்சம் லஞ்சமாக கேட்டார். அதற்கு நான், எதற்கு சார் இவ்வளவு பணம் என்று கேட்டதற்கு, மேற்படி சொத்தில் வில்லங்கம் இருப்பதாக கேள்வி பட்டேன் மேலும் உங்க அப்பா ரியல் எஸ்டேட் தொழில் பண்ணுறவர் தானே, நீங்க பணம் கொடுத்தால் தான் பதிந்து தருவேன் எனக்கூறினார் நான் அதற்கு அப்படி எல்லாம் வில்லங்கம் எல்லாம் இல்லை நீங்க செக் பண்ணிட்டு சரியா இருந்தா பத்திரம் போடுங்க எனக்கூறினேன். அதற்கு அவர், நல்லா டெவலப் ஆகிற இடம் தானங்க அதனால ரூபாய் கொடுக்க வேண்டியதானே, இல்லைனா இப்பதைக்கு முடியாது எனக் கூறினார். அதற்கு நான், என்னால அவ்வளவு பணம் புறட்ட முடியாது எனக் கூறவும் சரிபரவாயில்லை முதல ரூ.25 இலட்சத்தை கொடுங்க மீதியை பின்னாடி நான் சொல்கிறேன் எனக்கூறி இப்பவே நான் சொல்லும் கணக்கில் ரூ.3 லட்சம் போடுங்க. பின்னர் ஒரு வாரத்திற்குள் மீதிப்பணத்தை வெளிப்பட்டிணம் பத்திர அலுவலகத்திற்கு எதிர் வரிசையில் பத்திரம் எழுதும் அலுவலகம் நடத்தி வரும் அயூப்கான் என்பவரிடம் கொடுத்து விடுங்கள் நான் அவரிடம் சொல்லி விடுகிறேன் எனக் கூறினார். நியாமாக செய்ய வேண்டிய வேலையை செய்ய வற்புறுத்தி பணம் கேட்டதனால் நான்

அப்போதைக்கு வேறு வழியில்லாமல் எனது KOTAK அக்கவுண்ட் நம்பரில் இருந்து அவருடைய கரூர் வைசியா கரூர் வங்கி கணக்கு எண்.1656155000061921 க்கு அனுப்பி விட்டு வந்து விட்டேன். பின்னர் கடந்த 18.05.2026 ஆம் தேதி மதியம் 01.00 அளவில் இராமநாதபுரம் வெளிப்பட்டிணம் சார்பதிவாளரை பத்திரப்பதிவு சம்மந்தமாக அலுவலத்தில் சந்தித்து என்னால் பணம் கொடுக்க இயலாது என்று கூறிய போது இப்போதைக்கு முதல கொடுக்க வேண்டிய ரூ.25 இலட்சத்துல உள்ள பாக்கி பணத்தை கொடுங்க மீதியை பிறகு பார்க்கலாம் எனக்கூறி அயூப்கானின் ESAF பாங்க் அக்கவுண்ட் நம்பர் 53240002221499 கொடுத்தார். பின்னர் வேறு வழியில்லாமல் மேற்படி அக்கவுண்டில் ரூ.5 இலட்சத்தையும் அன்று மாலையில் அயூப்கான் அலுவலகத்தில் வைத்து ரூ.17 இலட்சத்தை அயூப்கானிடம் கையிலும் கொடுத்தேன். அப்போது அவர் மீதிப்பணத்தை கொடுப்பது சம்மந்தமாக சாரிடம் பேசிருங்க எனச் சொன்னார். அதனைத்தொடர்ந்து நேற்று 20.05.2026 ஆம் தேதி காலை 09.45 மணிக்கு இராமநாதபுரம் வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சார்பதிவாளர் இராமநாதனை சந்தித்து விபரம் கேட்கலாம் என்று நினைத்து சென்ற போது அவர் இருக்கையில் இல்லை எனவே நான் இராமநாதனின் போனில் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர், நான் பிசியாக இருக்கிறேன் நீங்க மதியத்திற்கு மேல் வாங்க நேரில் பேசிக் கொள்ளலாம் எனக்கூறினார். பின்னர் சுமார் நேற்று மதியம் 03.30 மணிக்கு அவ்வலுவலகம் சென்று சார்பதிவாளர் இராமநாதனை நேரில் சந்தித்து என்னிடம் மேற்படி பணம் கொடுக்க வழியில்லை எனது பத்திரத்தை பதிந்து கொடுங்க எனக்கேட்டதற்கு, அவர் மீதமுள்ள ரூ.25 இலட்சத்தை கொடுத்தால் தான் பத்திரத்தை பதிய முடியும் என்று கூறினார் அதற்கு நான் ஏற்கனவே ரூ.25 இலட்சம் கொடுத்துட்டேன் இதற்கு மேல என்னால கொடுக்க முடியாது என்று சொன்னதற்கு, அவர் ரூ.10 இலட்சத்தை குறைத்து ரூ15 இலட்சமாவது கொடுங்க என்று கூறினார் அதற்கு நான், நகை வாங்க என் கையில 3 இலட்சத்தை தவிர வேறு எதுவுமில்லை என்று சொன்னதற்கு, அதெல்லாம் முடியாது வேலை நடக்கனுமுன்னா அந்த 3 இலட்சத்தை ரொக்கமாக அயூப்கானிடம் கொடுத்துட்டு கூடவே மீதி ரூ.12 இலட்சத்தை எப்படியாவது ரெடி பண்ணி நான் பின்னர் அனுப்பும் அக்கவுண்ட் நம்பரில்

போட்டுருங்க அன்றே பதிந்து விடுகிறேன் எனக்கூறினார். அதன் பின்பு நான் நேற்று டோக்கன் போட்டுவிட்டு யோசித்து பார்க்கும் போது நியாயப்படி செய்ய வேண்டிய அரசு பணியை செய்வதற்கு ரூ.25 இலட்சத்தை வற்புறுத்தி லஞ்சமாக பெற்றதற்கும் மேலும் கூடுதலாக ரொக்கமாக 3 இலட்சமும், அக்கவுண்ட்டில் ரூ.12 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.15 இலட்சம் இலஞ்சமாக கேட்ட இராமநாதபுரம் வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் திரு. இராமநாதன் மற்றும் அவருக்கு லஞ்சம் பெற்று தர உதவியாக இருக்கும் அயூப்கான் ஆகியோர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) Dr.A.ஹாலிக் அலாவுதீன். அய்யா, வாதி நிலையம் ஆஜராகி இன்று 21.05.2026 ஆம் தேதி காலை 09.15 மணிக்கு கொடுத்த புகாரைப்பெற்று எதிரியின் முன்நடத்தையை விசாரணை செய்து 09.45 மணிக்கு இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.03/2026 u/s 7 (a) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 ன் படி வழக்கு பதிவு செய்தேன். இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

21/05/2026

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
இராமநாதபுரம்.